## வாரத்தில் ஓர் முத்து!

18 ஜனவரி 2011 சகரியா பூணன்

# 90. தேவனைவிட்டு விலகச்செய்யும் பணஆசைக்கு விலகி நில்லுங்கள்!

*இன்றைய போதை வஸ்து வியாபாரிகள் வாலிபர்களிடத்தில் போதை மருந்தை சிறிதளவு கொடுத்து "முதலில் டேஸ்ட் பண்ணிப் பாருங்கள்!" எனக் கொடுப்பதைப் போலவே, சாத்தானும் தந்திரமாக செயல்படுகிறான். இவ்வாறாகவே சாத்தான் அவர்களின் ருசியை, முடிவில் "உலகப் பொருளுக்கு" அடிமையாகும்படி வென்று விடுகிறான்! இவ்வாறு, இவர்களை கொஞ்சம் கொஞ்சமாய் நடத்தி முடிவில் உலகப் பொருட்களின் தூண்டில் கொக்கியில் முழுமையாய் சிக்க வைத்துவிடுகிறான். இவ்வாறு சிக்கியவர்களையும், அவர்களுடைய குடும்பங்களையும் சாத்தான் நரகத்திற்குள் நடத்தி அவர்களையும் அழித்து விடுகிறான்!!*

**சபையைக் கட்ட வேண்டுமென்று தேவன் தெரிந்து கொண்டவர்களின் ஜீவியம், இப்போது பணத்தைப் பின்தொடர்ந்ததின் நிமித்தம், அந்தப் பொன்னான வாழ்க்கை அவர்களுக்கு மண்ணாய் போய்விட்டது!**

*ஒருவன் வீழ்ச்சியடைவதற்கு பணத்தை நாடி, அதைப் பின்தொடர வேண்டுமென்பதில்லை! நீங்கள், உங்கள்* **இருதயத்தில்** *பணத்தை நேசித்தாலே போதும்...... கொடிய வீழ்ச்சி உங்களுக்குச் சொந்தமாகி விடும். இதை வேதம் குறிப்பிடுகையில், "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளால் தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (1தீமோத்தேயு 6:10) எனத் தெளிவாகக் கூறுகிறது. ஓர் வாலிபன் ஒரு பெண்ணின் பின்னாகத் திரியாவிட்டாலும், அவளைத் தன் இருதயத்தில் இச்சித்துக் கொண்டிருக்க முடியும்!*

**அதைப்போலவே, ஒருவன் பணத்தின் பின்னாக ஓடாவிட்டாலும், இன்னமும் அவன், தன் இருதயத்தின் அந்தரங்கத்தில் பண ஆசை கொண்டவனாய் இருக்க முடியும். ஒரு விசுவாசி வீழ்ச்சியடைவதற்கு, இதுபோதும்!**

*நாம் ஆண்டவரை முழு இருதயத்தோடு நேசிக்கிறோம் என்பதை, நாம் பணத்தை வெறுத்து. . . அசட்டை செய்யத் துவங்குவதை வைத்து, கண்டு பிடித்து விடலாம்! இந்த சோதனையை முன் வைத்து, ஆண்டவர் மீது தாங்கள் கொண்டுள்ள அன்பைப் பரீட்சித்துப் பார்க்க எத்தனைபேர் ஆயத்தமாய் இருக்கிறார்கள்? நீங்கள் இன்னமும் பணத்தை நேசித்துக் கொண்டு உங்களை "ஆவிக்குரியவன்" என வானளாவ மெச்சிக் கொண்ட யாவும் உண்மையில்லை என்பதை இப்போதாவது அறிந்து கொள்ளுங்கள்! பண ஆசைக்கு அல்லது அதன் நேசத்திற்கு முழுமனதாய் விலகிநில்லுங்கள், இப்போது தெய்வ அன்பு உங்கள் இருதயத்தை முழுவதுமாய் ஆட்கொள்ளும் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை!*

தமிழ் வடிவம் : T. ரத்தினகுமார்

© Zac Poonen ( 2011 )